1994 மே 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 512, திரு. ஏ.கே.சி. சுந்தரவேல், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

512—

அனைத்து நகரங்களிலும் தானியங்கி பால் வழங்கும் நிலையம் அமைத்தல்.

*21887— திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் :

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் உள்ளது போல் தமிழகத்தில் உள்ள அனைத்து நகரங்களிலும் தானியங்கி பால் வழங்கும் நிலையம் மூலம் பால் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன், பால் வளத் துறை அமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்சமயம் கருத்துரு ஏதுமில்லை.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையைப் போலவே மதுரை, திருச்சி, கோவை, திருநெல்வேலி, சேலம், வேலூர் போன்ற நகரங்களிலேயும் மக்கள் நெருக்கடி அதிகமாக உள்ளதால், பால் வழங்க சிரமம் இல்லாமல் இருக்க சென்னையில் உள்ளது போல தானியங்கி பால் வழங்கு நிலையம் அமைக்கப்படுமா? ஒரு தானியங்கி பால் வழங்கக் கூடிய நிலையம் அமைக்க எவ்வளவு செலவாகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் உள்ளது போல பெரு நகரங்களான மதுரை, கோவை, திருச்சி, சேலம், ஈரோடு மற்றும் தர்மபுரி ஆகிய இடங்களில் தானியங்கி பால் வழங்கு நிலையம் அமைக்க தேசிய பால் வாரியத்திற்குப் பரிந்துரை செய்யப்பட்டது. இக்கருத்துருவிற்கு தேசிய பால்வள வாரியம் ஒப்புதல் அளிக்கவில்லை. தானியங்கி பால் வழங்கு நிலையம் அமைக்க தோராயமாக ரூ. 3 இலட்சம் செலவாகும்.

திரு. ஏ.கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தானியங்கி பால் வழங்கு நிலையத்திற்குக் காலையில் அதிகமாக பெண்கள் செல்கிறார்கள். பல இடங்களிலே பெண்களுக்கு டோக்கன்கள் கொடுக்கின்ற நேரத்திலே, கிண்டலும்,

கேலியும், பேச்சுக்களும் பேசுகின்ற வாய்ப்பு இருக்கிறது. பெண்களுக்கு அதிகமாக வேலை வாய்ப்பு உருவாக்கித் தரும் அக்கறையுள்ள நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் நல்லாட்சியில் முழுக்க முழுக்க தானியங்கி பால் வழங்கு நிலையங்களில் டோக்கன் கொடுக்க பெண்களே நியமிக்கப்படுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் முன் வந்தால் அது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிங்கை கோவிந்தராசு

திரு. சிங்கை கோவிந்தராசு; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் வெளிநாடுகளில் உள்ள வீடுகளில் மின்சார இணைப்பு போலவே, கேஸ், பால் போன்றவைகளுக்கும் இணைப்பு கொடுத்து வருகின்றார்கள். அதைப்போலவே நம்முடைய தமிழகத்தினுடைய தலை நகரங்களில், மாவட்ட தலைநகரங்களில் எல்லாம் மின்சார இணைப்பு போலவே, பாலையும் இணைப்பு மூலம் கொடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் சாத்தியக் கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 513, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

513—

ஊனமுற்ற ஏழைக் குழந்தைகளை அரசே தத்து எடுத்து வளர்த்தல்.

*22019—திரு. ஜெ. பாலகங்காதரன்:

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊனமுற்ற ஏழைக் குழந்தைகளை அரசே தத்து எடுத்து அவர்களை வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர் :

இல்லை.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS